மதுரை சீடு குழந்தைகள் பேரவை வெளியிடும்

# புதுயுகம்

தமிழ்ச்சுற்று சித்திதழ்

உலகு 2
ஏப்ரல்-மே 2008
பணி மடம் 7
நன்கொடை ரூ. 2/-



## Lakshmi Vilas Palace, Baroda

Lakshmi Vilas Palace, an extravagent building, was built by Maharaja Sayajirao Gaekwad III in 1890 is till date the residence of the royal family. Its ornate Darbar Hall has an Italian mosaic floor and walls with mosaic decorations. The palace houses a remarkable collection of old armoury and sculptures in bronze, marble & terracotta. The Palace "compound" as it is known here is of over 700 acres and houses a number of buildings, particularly the Moti Baug Palace and the Maharaja Fateh Singh Museum building.



டாக்டர். தாஜ் ராஜப்பா என்ற அற்புத பெண்மணியை நெடுங்காலமாய் மதுரையில் நற்பணிகளாற்றிவரும் பெருந்தகையாளர்கள் என்றும் மறந்திருக்க மாட்டார்கள். எண்ணற்ற ஏழை, எளியோர் உடல் நலனுக்காகவும், ஏராளமான குழந்தைகள், இளைஞர்கள், பெண்கள், முதியோர் நல்வாழ்வுக்காகவும் வாழ்ந்தவர் டாக்டர் தாஜ் அவர்கள். 2008ஆம் ஆண்டு துவக்கத்தில் மதுரை வருகையின் போது முகப்பு அட்டையில் காணும் பரோடா லெட்சுமி விலாஸ் மாளிகை படத்தை சீடு குழந்தைகள் இதழுக்கு பரிசளித்தார் (அது ஒரு Zincovit உயிர்சத்து மாத்திரைக்கான விளம்பரப்படம்). தன்னை காண வருவோர்க்கு ஏதேனும் தகவலையோ, பொருளையோ பரிசாய் தருவது, டாக்டர். தாஜ் அம்மா அவர்களின் அற்புத குணங்களில் ஒன்று. அவரின் மகத்தான நற்பணிகளை சீடு 10ஆம் ஆண்டு துவக்கத்தில் நன்றியுடன் நினைவு கூர்கின்றது.

---

மதுரை சீடு அறக்கட்டளை நலிவுற்ற குழந்தைகள், இளைஞர்கள் மேம்பாடு மற்றும் குழந்தைகள் உரிமைக்காகவும், வளமைக்கல்விக்காகவும், பணி செய்யும் ஓர் தன்னார்வ தொண்டு நிறுவனமாகும்.

# இது விதியல்ல, சதி

சமீபத்தில் சென்னை முகப்பேரில் நடந்த சம்பவம் ஒன்று நமது சமுதாயத்தின் மீதும் ஆட்சியாளர்கள் மீது ஏன் நம்மீதே நமக்குக் கோபத்தையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்துகிறது. 24-வது அனிதா என்ற பெண்மணி தனது மூன்று வயதுப் பெண் குழந்தையை நர்சரி பள்ளியில் சேர்க்க நன்கொடை கொடுக்க முடியாத நிலையில் தற்கொலை செய்து கொண்டாள் என்பதுதான் அந்தத் திடுக்கிடும் செய்தி.

அனிதா தற்கொலை செய்து கொண்டு விட்டாள். ஆயிரக்கணக்கான அனிதாக்கள் தங்கள் குழந்தைகளைப் படிக்க வைப்பதற்குப் பல்வேறு தியாகங்களைச் செய்து கொண்டும், வெளியில் சொல்ல முடியாத நரக வேதனையை மனதில் சுமந்து கொண்டும், கடன்காரர்களுக்குப் பதில் சொல்ல முடியாமல் அவமானத்தை மென்று விழுங்கிக் கொண்டும் வாழ்கிறார்கள் என்பது ஒன்றும் ரகசியமல்ல. பள்ளிக்கூடம் திறக்கிறது என்கிறபோதே வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு பதை பதைக்கும் பெற்றோரும், உற்றார், உறவினர், நட்பு என்று அனைவரிடமும் கைநீட்டிக் கெஞ்சும் பெற்றோரும் ஏராளம் ஏராளம்.

"தம்மிற் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது" என்பது வள்ளுவப் பேராசானே எழுதி வைத்த குறள் அக்கம்பக்கத்துப் பெண்டிரும், உற்றார் உறவினரும் தத்தம் குழந்தைகளைப் பெரிய பணக்கார குழந்தைகள் படிக்கும் பள்ளிகளுக்கு அனுப்பும்போது, தங்களது குழந்தைகளுக்கும் அந்தக் கல்வி தரப்பட வேண்டும் என்பது எந்தவொரு பெற்றோரும் விழைவது இயல்பு. அப்படித் தர முடியாத நிலையில், விரக்தியும் வேதனையும் ஏற்படுவது தவிர்க்க முடியாததுதான்.

கிராமப்புறங்களிலிருந்து படித்துப் பட்டம் பெற்றுத் தங்கள் வாழ்க்கைத் தரத்தைப் பன்மடங்கு உயர்த்திக் கொண்ட கையொடு, தத்தம் குழந்தைகளை மிகப்பெரிய பணக்காரக் குழந்தைகள் படிக்கும் பள்ளியில் படிக்க வைக்க, தங்களுக்கு இயலாமல் போன கனவுகளைப் பூர்த்தி செய்து கொள்ளப் பலர் துடிக்கிறார்கள். அதற்காக எந்த விலையையும் கொடுக்க அவர்கள் தயாராகிறார்கள் என்பதைத்தான் மேலே கூறிய செய்தி உறுதிப்படுத்துகிறது.

சமச்சீர் கல்வி, உயர்கல்வி, மருத்துவ மற்றும் பொறியியல் கல்லூரிகள் என்றெல்லாம் பேசுகிறோமே தவிர, இந்தத் தனியார் பள்ளிகளின் கட்டணத்தையும், நன்கொடையையும் முறைப்படுத்த நமது அரசு ஏன் முன் வருவதில்லை என்பது புதிராகவே இருக்கிறது. காளான்கள் போலத் தனியார் பள்ளிகள் ஆங்காங்கே முளைக்கின்றன. இந்தப் பள்ளிகள் நன்கொடை வசூலித்துத் தங்களது கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கிக் கொள்கின்றன. கேள்வி கேட்க அரசுக்கு அதிகாரம் இல்லை என்றும், இது தனியார் முயற்சி என்றும் கூறுகிறார்கள். நாமும் பார்த்துக் கொண்டு வாளாவிருக்கிறோம்.

தனியார் பள்ளிகளை விடுங்கள். அரசு நடத்தும் பள்ளிகள் மற்றும் அரசின் உதவியுடன் நடத்தப்படும் பள்ளிகளில் அதிகாரபூர்வமற்ற வகையில் நன்கொடைகள் வசூலிக்கப்படுகின்றன. இது அரசுக்கும் அதிகாரிகளுக்கும் தெரியாமலா நடைபெறுகிறது? இத்தனைக்கும் தமிழக அரசின் 1972ஆம் ஆண்டு சட்டப்படி இந்த நிறுவனங்கள் நன்கொடை வசூலிப்பது தடுக்கப்பட்டுள்ளது.

ஒருபுறம் இடஒதுக்கீடு மூலம் சமூக நீதியை நிலைநாட்டுகிறோம் என்று சொல்லிக் கொள்பவர்கள், இன்னொரு புறம் பள்ளிக் கல்வியில் தனியார் தலைமீட்டை அதிகரித்து சமூக ஏற்றத் தாழ்வு என்கிற நஞ்சைப் பிஞ்சு உள்ளங்களில் விதைக்கின்றனர். பணக்காரக் குழந்தைகள் மட்டுமே படிக்கும் தனியார் பள்ளிகள் ஒருபுறம், ஏழைகள் மட்டுமே படிக்கும் அரசு மாநகராட்சி, நகராட்சி மற்றும் பஞ்சாயத்துப் பள்ளிகளும், அரசு உதவியுடன் நடத்தப்படும் பள்ளிகளும் மறுபுறம்.

பசி, வறுமை, ஏழ்மை என்றால் என்னவென்றே தெரியாமல் வளரும் சமுதாயம் ஒருபுறம், கல்வியில் வறுமையே கதி என்கிற விதியை வரித்துக் கொண்ட குழந்தைகள் மறுபுறம். இட ஒதுக்கீட்டால் ஏற்படும் சமூகநீதி கூட பணக்காரப் பள்ளிகளில் படித்தால் மட்டுமே கைகொடுக்கும் துர்ப்பாக்கிய நிலை. ஏழையாகப் பிறந்த குற்றத்திற்காக அந்தக் குழந்தையும் அந்தக் குழந்தையைப் பெற்ற குற்றத்திற்காக அந்தப் பெற்றோரும் இதையெல்லாம் விதியென்று கருதி வாளாவிருப்பதுதான் சமுதாய நீதியா?

மேலே எழுப்பிய கேள்விகளைப் பெருந்தலைவர் என்று அழைக்கப்படும் முன்னாள் முதல்வர் கு. காமராஜ் உணர்ந்திருந்தார். அதனால்தான் கட்டாயக் கல்வி என்கிற பெயரில் அனைவருக்கும் கல்வி அளித்தது மட்டுமல்லாமல் பள்ளிக் கல்வியை அரசின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார். தனியார் பள்ளிகளையும் அரசின் சட்ட மற்றும் பாடத் திட்டங்களுக்கு உட்பட வைத்தார். தமிழகத்தில் சாதி பேதம் மறைந்து சமூக ஏற்றத்தாழ்வுகள் பெருமளவில் குறைந்ததற்குக் காமராஜரின் கல்விக் கொள்கைதான் தலையாய காரணம்.

பள்ளிக் கல்வியை தனியாரிடமிருந்து அகற்றி அரசே ஏற்று நடத்துவது மட்டும்தான் இதற்கு ஒரே தீர்வு. அதைச் செய்யாத வரையில் சமூக நீதியும் சமச்சீர் கல்வியும், அனைவருக்கும் கல்வியும் உதட்டளவு உபன்யாசமாகத்தான் தொடரும்.

நன்றி
தினமணி நாளிதழ்

# தொண்டர் S.முருகபாண்டியின் பாடல்கள்

## 1

லாலா லா லா லா லா லா! லா லா லா லா லா!
குழந்தைச் செல்வம் நாங்கள் தான்
குழந்தைச் செல்வம் நாங்கள் தான் (2)
கும்மாளமாய் இருப்போம்
ஆனந்தமாய் படிப்போம்
உற்சாகமாய் ஆடுவோம்
குதூகலமாய் குதிப்போம்
ஆரவாரமாய் நாளை உலகை ஆளுவோம்



பி. பிரவீன்
2ஆம் வகுப்பு



முத்துமீனா
2ஆம் வகுப்பு

## 2

ல லா என்று சொல்லி லால்குடி போகலாம்
ம மா என்று சொல்லி மாமதுரை போகலாம்
ச ச என்று சொல்லி சர்க்குடி போகலாம்
த த என்று சொல்லி தத்தனேரி போகலாம்
க க என்று சொல்லி கரும்பாலைக்கு வந்தோம்
வ வ என்று சொல்லி வசந்தமுகாம் வந்தது
வசந்தமுகாம் வசந்தமுகாம் என்று சொல்லி
வர்ணஜாலம் படைத்தோம்.

## 3

தஞ்சாவூர் பொம்மை போல தலையை ஆட்டுவோம்
மதுரைக்கு போய் தானே மல்லி வாங்குவோம்
திண்டுக்கல்லு பூட்ட எடுத்து வாய பூட்டுவோம்
நெல்லைக்கே நாங்க அல்வா கொடுப்போம்
திருப்பூர் பனியன் தான் மேலே போடுவோம்
கும்பகோண வெத்தலைய வாங்கி போடுவோம்
திருச்சி மலைக்கோட்ட மேல ஏறி பார்ப்போம்
கரும்பாலை சிறக்க வந்து பார்ப்போமே
வசந்த முகாமில் கலந்து கொண்டு
துன்பங்களை வென்றிடுவோமே.



அ.ஜெர்க் பிரதௌஸ் பிரியதர்ஷன்
2ஆம் வகுப்பு

[illegible]

அ.ஜெர்க் பிரதௌஸ் பிரியதர்ஷன்
2ஆம் வகுப்பு

## 4

ஜாலி ஜாலி ஜாலி கொண்டாட்டம்
வந்தது ஜாலி
வசந்தமுகாம் தந்தது ஜாலி ஜாலி ஜாலி
குரங்கைப்போல குதிப்போம் (குரங்கு சத்தம்)
குயிலைப்போல பாடுவோம் (குயில் சத்தம்)
மானைப்போல ஓடுவோம் (ஓடுதல் போல செய்கை)
மயிலைப் போல ஆடுவோம் (ஆடுதல் போல செய்கை)
மகிழ்ச்சி பொங்க துள்ளுவோம் (ஜாலி)
துன்பங்களை தொலைப்போம்
துயரங்களைப் போக்குவோம் ஜாலி)
உயர உயர பறப்போம்
உல்லாசமாய் திரிவோம் (ஜாலி)
உலகத்தை சுற்றுவோம்
உண்மைகளை படிப்போம்
எல்லோரையும் மதிப்போம்
வெற்றிக்கனி சுவைப்போம் (ஜாலி)

## விடுகதைகள்

1. காலையில் ஊதும் சங்கு கறிசமைக்க உதவும் சங்கு
2. சின்ன சிட்டுக் குருவிக்கு எட்டு முழச் சேலை
3. எல்லாம் காட்டும் எதுவும் இருக்காது
4. அச்சு இல்லாத சக்கரம் அழுக்கோடும் சக்கரம்
5. வெளுத்த அழகிக்கு கறுத்த தலைப்பாகை
6. மண்ணுக்குள் இருக்கிற மாயாண்டி உரிக்க உரிக்க தோலாண்டி
7. பறப்பதும் இடம் தெரியும் போய் சேரும் இடம் தெரியாது
8. ஒரு இடலிக்கு மூன்று பேர் சுற்றுவார்கள்
9. பாய் சுருட்ட முடியல பணம் எண்ண முடியல
10. பச்சை, வெள்ளை, சிவப்பு கலவையாலே மாறுகிறது
11. காலையில் வருவான் மாலையில் போவான் அவன் யார்?
12. வெற்றிலை போடாமலே வாய்சிவந்தவன் அவன் யார் ?

K.சங்கீதா VI, கெவினா V, N.பிரதீபா V

**விடைகள் :**

1. சேவல்
2. வெங்காயம்
3. கண்ணாடி
4. வளையல்
5. தீக்குச்சி
6. வெங்காயம்
7. புகை
8. காற்றாடி
9. வானம், நட்சத்திரம்
10. வெற்றிலை, சுண்ணாம்பு, பாக்கு மொத்தம் சிவப்பாக மாறுகிறது
11. சூரியன்
12. கிளி

## கவிதை கேளுங்கள்

### தாயே என்னால் முடிந்தது

உன் கருவறையில் பத்து மாதம்
ஆயுள் வரைக்கும் நீ தரும் பாசம்
தொடும்போது படும் உன் சுவாசம்
தொட்டிலின் தூளியும் என் வனவாசம்
என்றும் உன் கண்ணில் என் உருவத்தில்
சிறும் உனக்காக
உனக்காக நான் சிந்தும் கண்ணீர் சாரல்

K. சத்யா VIII

உலகத்தை சுற்றுவது பூமி
இட்லி சுடுவது மாமி

R. கார்த்தி VIII

ஊர் நடுவே சிறு மையம்
நீயும் கூட வந்து சேரு
பாடங்களை நல்லா படி
நூறு பேரு சேர்ந்து படி
நாடு போற்றும் நல்லாறு

அருள்மொழி பிரதீபா, VII

## ஐயோ... அம்மா!

மரத்தில் இருக்கும் நுங்கு
ஒருவர் இறந்து விட்டால் சங்கு

பள்ளியில பாடம் நடத்துறது சாரு
வீட்டுல அம்மா கடையுறது மோரு.

காட்டுல மேயுது காட்டானை
தீர்ப்பு சொல்லுது எங்களூரு நாட்டாமை



நம்மகிட்ட இருக்கு கண்ணு
ரோட்டுல இருக்கு மண்ணு

வாரத்தில் வந்தா சனி
எங்க கிளாசில் இருக்கிறான் மணி

S.முத்து கணேஷ் VII

சர்க்கரை இனிக்கிற சர்க்கரை
சிறு எங்க மேல காட்டுது அக்கறை
கண்ணும் கண்ணும் நோக்கியா
சிறு - ஐ கொஞ்சம் பாக்குறியா
அமைதியா இருக்கும் ஸ்கூல்
ஜாலியா இருக்கும் சிறு
தோழியிடம் இருக்கும் நட்பு
சிறுல இருக்கும் அன்பு

சர்மிளா VII

கடலில் இருக்குது உப்பு,
மனிதன் உடலில் இருக்குது நட்பு

P. சத்யா, VII

டீ.வி. பாத்தா போரு
சிறுக்கு வந்தா ஜோரு

மாம்பழத்தின் பிறப்பிடம் - இந்தியா
உலகத்தின் முதல் வீட்டு விலங்கு - நாய்

K. கௌசல்யா, VII



செய்தித்துளிகள்

சேமிப்பு விழிப்புணர்வு



# வசந்த முகாம்

கோடையை கொண்டாடுவதற்கு வசந்த முகாம் கேம்ப் நடத்தப்படுகிறது. கேம்புன்னா எனக்கு என்னான்னே தெரியாது. சீடு டிரஸ்ட்ல படிச்சதுனால இந்த இனிமையான கேம்ப் கிடைச்சது. அப்புறம் நாடகம் போட சொன்னாங்க. நான் நாடகம் நடிச்சதே இல்ல. உடனே எங்க டீம் யோசிச்சு ஒரு கதை ரெடி பண்ணோம். அருமையான நாடகம் போட்டோம் வேஸ்ட் ஆன பொருளை நாங்கள் அழகான பொருளாக்குனோம். திறமையின் நாள்ல அவுங்கவுங்க திறமையை வெளிப்படுத்தினோம். வண்ணங்கள் நாள்ல கலர் பொடியெல்லாம் தூவி சந்தோஷமாக நடனம் ஆடினோம். சூழல் நாள்ல நிறைய புதுசு புதுசா விளையாண்டோம். நிறைவு நாள்ல ரொம்ப ஜாலியா இருந்தோம். எங்களுக்கு எல்லா நாளும் ஸ்நாக்ஸ் கொடுத்தாங்க இந்த மாதிரி கேம்ப நாங்க ரொம்ப விரும்புகிறோம்.

C.பழனிக்குமார் VIII

# என்னை அலங்கரித்து

வசந்த முகாம் மிக மிக நன்றாக இருந்தது. இந்த வசந்த முகாம் என் வாழ்வில் மறக்க முடியாத ஒன்று. எனக்கு வசந்த முகாமில் பிடித்த விளையாட்டு கோழிச் சண்டை விளையாட்டு. இங்கு ஒவ்வொரு நாளும் நான் ஆடிய நடனம் மகிழ்ச்சி தந்தது. வசந்த முகாமில் உள்ள தொண்டர்களும் என்னிடம் நன்றாக பழகினர். இரண்டாவது நாள் சுந்தரம் பார்க் சென்று Roll Play நடித்தது நன்றாக இருந்தது. முதல் நாள் ART from Waste செய்தது நன்றாக இருந்தது. திறமையின் நாளில் என் தனித்திறமை யோகாவை வெளிப்படுத்த முடிந்தது. மூன்றாவது நாளில் வண்ணங்களின் நாளில் பூக்களை வைத்து என்னை அலங்கரித்தது மகிழ்ச்சி அளித்தது. கலர் பொடி விளையாட்டு நன்றாக இருந்தது. சமையல் செய்தது புது அனுபவமாக இருந்தது. பாடல் எல்லாம் மகிழ்ச்சி தரக்கூடியதாக இருந்தது. நிறைவு நாளில் எல்லோரையும் பிரிவது சிறிது வருத்தம்.

M. மதன், VIII





V. ஸ்ரீநாத் V

# நீங்களும் வரையலாமே.....



K.கௌசல்யா, VII



R.காயத்ரி, V



ம. அழகுஜோதி, VI



C.சந்தோஷ்குமார், V



P.கௌதம், VII



K.மணிகண்டன், VII



M.பிரகதி, VIII

## நகைச்சுவை துணுக்குகள்

(பஸ் நிலையத்தில்)

நபர் 1 : ஐயா என்னூருக்கு எந்த பஸ் போகுதுங்க?

நபர் 2 : 53 ஆம் நம்பர் போகும் (சிறிது நேரம் கழித்து)

நபர் 2 : ஐயா! நீங்க ஏன் போகல?

நபர் 1 : இதுவரைக்கும் 50 பஸ் போயிருக்கு இன்னும் 3 பஸ் வந்தத்துக்கப்புறமே போகணும்.

ஆசிரியர் : மாணவர்களே! என்னை உங்க நண்பனைப் போல் நினைச்சுக்குங்க.

மாணவன் : (உடனே) சரிடா மச்சி! என் பக்கத்துல வந்து உட்காரு.

ராமு : என்னடா! ரேங்க் கார்டுல உங்கப்பாகிட்ட கையெழுத்து வாங்குனே?

சோமு : எங்கப்பா போலீசுல! 50 ரூபா கொடுத்து கையெழுத்து வாங்கிட்டேன்.

கிராமவாசி : நீங்க என்ன வேலை பாக்குறீங்க?

ஆராய்ச்சியாளர் : தவளை ஆராய்ச்சி பண்றேன்.

கிராமவாசி : தினமும் எத்தனை தடவ தாவுறீங்க.

நபர் 1 : நான் பேச்சாளர் மட்டுமல்ல! நல்லா பாடவும் செய்வேன்

நபர் 2 : சார் நான் உங்கள மேடையில பாக்குறேன்

நபர் 1 : ??? !!!

நபர் 1 : ஏன் அவர் ஹோட்டலில் இட்லி வாங்கி வீட்டுல போய் சாப்பிடுறாரு?

நபர் 2 : அவருக்கு ஹோட்டலில் சாப்பிட்டா ஒத்துக்காதாம்.

- B.சுவேதா IX

## கவிதை தோரணம்

காற்றாய் வந்தால் சுவாசிப்பேன்
நட்பாய் வந்தால் நேசிப்பேன்
காடு சென்று தவமிருந்தால்
உனது நட்பை தான்
வரமாய் கேட்பேன்.

உன்னைப் பார்த்தவுடன் சிரிக்கும்
உதடுகளைவிட உனக்காக
கண்ணீர் சிந்தும் கண்களை நேசி

M. மஞ்சுளா தேவி X

போன் அடிச்சாத்தான் ரிங்கு
படிச்சாதான் வாழ்க்கையிலே கிங்கு

A.தாசன் பரிதா, IX

குமரன் கையில் பிடித்தான் கொடி
அப்பன் கொடுத்தான் அடி
குழந்தையாய் நீ விளையாடியது அன்னை மடி
மனிதரிடையே வேண்டாம் வேற்றுமை இடி
பிறரைப் பார்த்து நீ என்றும் படி

P.சரவணப்பிரியா XII

பிரிந்தபோது
ஏழேழு ஜென்மம் எடுத்து வந்தாலும்
நீ தான் என் தோழி என்று நினைத்திருந்தேன்.
இப்பொழுது தான் தெரிகிறது இது ஏழாவது
ஜென்மமென்று

K.பிரியா X

முடிந்த கடைசி நாளில்
தோழியிடம் வாங்கினேன் கையொப்பம்
அப்போது தெரியவில்லை எனக்கு
அது ஒரு நட்பு முறிவிற்கான சம்மத
உடன்படிக்கை என்று.

V.திவ்யபாரதி X

# ஒழுங்கா படிச்சுடுங்க



ஒரு சிற்பி சிலை செய்ய பாறைகளை உடைப்பதற்காக மலைப்பகுதிக்கு சென்றார். அப்போது அங்கிருந்த இரண்டு பாறைகளில் ஒன்றைப் பார்த்து உன்னை செதுக்கலாமா? என்று கேட்டார். அதற்கு அந்த பாறை வேண்டாம். என்னால் முடியாது எனக்கு வலிக்கும் என்றது. பிறகு அந்த சிற்பி இரண்டாம் பாறையிடம் சென்று உன்னை செதுக்கலாமா என்று கேட்டார். அதற்கு அந்த பாறை இந்த வாய்ப்பு எனக்கு எப்போது கிடைக்கும் என்று காத்திருந்தேன் என்றது. சிற்பி அந்தப் பாறையை சிலையாக வடித்து கோயிலில் வைத்தார். மக்கள் சிலையைக் கண்டு வணங்கினர். பூஜை நடத்துவதற்கு கோயிலை சீரமைத்தனர். சிலையாக வடிக்க மறுத்த பாறையை தேங்காய் உடைக்கும் கல்லாக வைத்துக் கொள்ள தீர்மானித்தனர். இக்கதை மூலம் ஆரம்பத்தில் சிறிது கஷ்டப்பட்டால் பிறகு வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியாக இருக்கலாம். இல்லையென்றால் அந்த தேங்காய் உடைக்கும் கல்லைப் போல வாழ்க்கை முழுவதும் கஷ்டப்பட வேண்டியிருக்கும். ஆனால் குழந்தைகளே படிக்கும் காலத்தில் ஒழுங்காக படிச்சுடுங்க இல்லைனா அந்த முதல் கல்போல வாழ்க்கை மாறிடும்.

K.முத்துப்பாண்டி, XII

## டவுட் பாண்டிச்செல்வி

ஆசிரியர் : காக்கா கா! கா!ன்னு கரையும்

பாண்டிச்செல்வி : அப்ப மயில் ம! ம!ன்னு மறையுமா

J.பாண்டிச்செல்வி IX

# காந்தி மியூசியம்

இந்தியாவின் முதல் மியூசியம், தென் மாநிலங்களுக்கென உள்ள ஒரே மியூசியம் என பல பெருமைகளை உடையது, மதுரை காந்தி மியூசியம். அடுத்தாண்டு பொன்விழா ஆண்டில் அடியெடுத்து வைக்கவுள்ள இம்மியூசியத்தின் வரலாற்று பின்னணி குறித்து சிலதகவல்கள் :

இதன் முந்தைய பெயர் கோடை மாளிகை, திருமலை நாயக்கர் மகாலுக்கு அடுத்து 2வது பெரிய மாளிகை. இதை திருமலை நாயக்கர், ராணி மங்கம்மாள் கட்டினார் என்று இருவேறு கருத்துக்கள் உள்ளன. 1670–இல் கட்டப்பட்ட இம்மாளிகை



ஆங்கிலேயர் கட்டுப்பாட்டில் வந்தபோது 1877இல் தென்பகுதி கட்டடங்கள் கூடுதலாக கட்டப்பட்டன. ஆங்கில நீதிபதிகளின் குடியிருப்புகளாக இருந்த இம்மாளிகை, மதுரை கலெக்டர் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு கலெக்டர் பங்களாவாக மாறியது. காந்தி மியூசியம் கலெக்டர் அலுவலக ரோட்டை ஆங்கிலேய கலெக்டர் மட்டுமே பயன்படுத்தி வந்துள்ளார்.

1948இல் காந்திஜி மரணமடைந்த பிறகு அவர் பயன்படுத்திய பொருட்களை கொண்டு மியூசியம் துவக்க முடிவு செய்யப்பட்டது. அரை நிர்வாணத்தை மேற்கொண்ட மதுரையில் ஆரம்பிப்பதுதான் சிறப்பாக இருக்கும் எனக் கருதி, 1959 ஏப். 15இல் பிரதமர் ஜவஹர்லால் நேருவால் மியூசியம் திறக்கப்பட்டது. காந்திஜி சுடப்பட்டபோது அவர் அணிந்திருந்த வேஷ்டி உட்பட அவர் பயன்படுத்திய 14 அரிய பொருட்கள் இங்குள்ளன. பின்னர் இவ்வளாகத்தில் 1981ல் அரசு அருங்காட்சியக கூடம் திறக்கப்பட்டது.

M.மாணிக்கராஜா IX, S.ஜெனனி X,

# நீங்களும் வரையலாமே.....



R.ரஞ்சித், IX



S.சரவணன், X



K.அசோக், X



O.வீரபாண்டி, IX



K.அசோக், X



M.காளிதாஸ், X

# கசப்பும் இனிக்கும்

கசப்பு பண்டங்கள் உடலை குளிர்ச்சியாக வைத்திருக்கும். எளிதில் ஜீரணமாகும்.

பாகற்காய், சுண்டைக்காய், அகத்திக்கீரை, வெந்தயக் கீரை, மணத்தக்காளி கீரை இவை கசப்பு நிறைந்தவை. கொத்தமல்லி, தூதுவளை, முளைக்கீரை, அரைக் கீரை, முருங்கைக் கீரை குறைந்த கசப்புடையவை. கறுப்பு கரிசிலாங்கண்ணி, பொன்னாங்கண்ணி, வல்லாரை இந்த கீரைகள் சிறிது கசப்பானவையென்றாலும் உடலுக்கு மிகவும் நல்லவை. தானியங்களில் வெந்தயம் கசப்பு நிறைந்தது. அரிசி அல்லது கோதுமையுடன் வெந்தயம் சேர்த்து இட்லி, தோசை செய்து சாப்பிடுவதால் சர்க்கரை வியாதி வராமல் தடுக்கலாம்.



உங்கள் அம்மா உங்களுக்கு நல்ல உடல் ஆரோக்கியம் வேண்டும் என்பதற்காகத்தான் கசப்பு பண்டங்களைச் சாப்பிட வற்புறுத்துகிறார். அதனால் கோபிச்சுக்காதீங்க! எதிர்காலத்தில் நோய்களிலிருந்து தப்பிச்சுக்குங்க!

- ஒரு சாக்லேட் 150 அடி வரை நடக்கக் கூடிய சக்தி கிடைக்கிறது.
- ப்ரை செய்யப்பட்ட உணவு வகைகளை சாப்பிடுவதை குறைத்து சத்தான காய்கறிகள் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- சாப்பிடும்முன் ஆப்பிள் துண்டுகளை சாப்பிட்டால் மிக நல்லது. ஆப்பிள் துண்டுகளை சாப்பிட்டுவிட்டு பின் சாப்பாடு சாப்பிட்டால் நிறைவாக சாப்பிட முடிகிறது. அத்துடன் கலோரி சத்தும் குறைந்து விடுகிறது.

  இதனால் ரத்த அழுத்தம் ஏற்படாது.சர்க்கரை சேராது. ஆப்பிள்களில் கலோரி குறைவு மட்டுமல்ல. நார்ச்சத்தும், விட்டமின்-'சி'யும் உள்ளது. இது உடலுக்கு இன்னும் நல்லது.
- சூரிய ஒளியில் தொடர்ந்து இருந்தால் தோல் புற்று நோய் வரும் என்பது உண்மைதான். ஆனால் 15 நிமிடம் வரை சூரிய ஒளியில் இருப்பதால் வைட்டமின் -டி சத்தும் கிடைக்கிறது. அதற்கு மேல் இருந்தால் நம் உடல் வைட்டமின் சத்தை கிரகிக்காது

P.சரண்யாதேவி [illegible], சிறு மருத்துவக் குழு

# ஜப்பானியர்கள் மலர் அலங்காரம்



- ஒரு கண்ணாடி கிண்ணத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.
- அதன் அடியில் முதலில் கொஞ்சம் களிமண்ணால் நிரப்பிக் கொள்ளுங்கள்.
- அதற்கு மேல் கூழாங்கற்கள், சிப்பிகள், கருங்கற்கள் ஆகியவற்றை அடுக்குங்கள்.
- இதற்கு நடுவே ஒரு சின்ன கிளையை புதையுங்கள்
- கிண்ணத்தில் பாதி அளவு நீரால் நிரப்புங்கள்.
- நீர்ப்பரப்பின் மேல் பூ இதழ்களால் அலங்கரியுங்கள்.

---

- ஒரு வண்ணத்துப்பூச்சி நம்மை பார்க்கும்போது 12,000 கண்கள் வழியாக பார்க்கும்.
- சுரங்கங்களின் 'கேனரி' பர்ட் என்ன தெரியுமா? விபத்துகளின் பின்னால் தடயங்கள் பறவைதான்.

# புதிர் பயணம்...



**5.** தப்பு 7-ஆம் எண்ணிலுள்ள விஷயத்தைப் படியுங்கள்.

**2.** இந்தியாவைப் பொறுத்தவரை நேருவின் பிறந்த தினமான நவம்பர் 14 குழந்தைகள் தினமாகக் கொண்டாடப் படுவது உண்மை. ஆனால் உலக அளவில் நவம்பர் 14 என்பது நீரிழிவு நோய் (டயபடீஸ்) தினமாகத்தான் கொண்டாடப்படுகிறது. அடுத்து நீங்கள் செல்ல வேண்டியது 15-ம் எண்ணில் உள்ள கேள்விக்கு



**18.** சரியாகச் சொன்னீர்கள் அடுத்ததாக 15-ஆம் எண்ணிலுள்ள கேள்விக்குப் பதிலளிக்கலாமே

**8.** ஆம். இப்போது 4-ஆம் எண்ணில் உள்ள கேள்விக்கும் சரியாக பதில் சொல்லிவிடுங்கள் பார்க்கலாம்.

**4.** ஜோனஸ் சால்க் என்ற விஞ்ஞானி கண்டுபிடித்த மருந்து அந்த மருந்து எது? போலியோ தடுப்பு மருந்து! என்பவர்கள் 10-ஆம் எண்ணுக்கும் இன்சுலின் மருந்து என்பவர்கள் 17-ஆம் எண்ணுக்கும் செல்லவும்.

**13.** நவம்பர் பதினான்காம் தேதி உலகெங்கும் எந்த தினமாக அறியப்படுகிறது? குழந்தைகள் தினம் என்பவர்கள் 2-ஆம் எண்ணுக்கும் நீரிழிவு நோய் என்பவர்கள் 18-ஆம் எண்ணுக்கும் செல்லவும்.

**6.** இல்லை. ஆங்கிலம் என்பதுதான் சரியான விடை. அடுத்து நீங்கள் பதிலளிக்க வேண்டிய கேள்வி 4-ஆம் எண்ணில் இருக்கிறது.

**10.** சரியான விடை. 1954ல் இந்தத் தடுப்பு மருந்தை அவர் கண்டுபிடித்தார். பாராட்டுக்கள் இதழின் பக்கங்களை தொடர்ந்து வாசித்து மகிழுங்கள்

**14.** ஆம். ஒட்டகச்சிவிங்கிக்கு மிகப் பெரிய இதயம் இருப்பதால் தான் அவ்வளவு நீளமான கழுத்துக்கும் சீரான ரத்தத்தைச் செலுத்த முடிகிறது. அடுத்து நீங்கள் பதிலளிக்க வேண்டியது 3-ஆம் எண்ணிலுள்ள கேள்விக்கு.

**1.** தற்போதுள்ள விலங்குகளில் மிகப் பெரிய இதயம் கொண்ட விலங்கு எது? யானை என்பவர்கள் 17-ஆம் எண்ணுக்கும், ஒட்டகச்சிவிங்கி என்பவர்கள் 14-ஆம் எண்ணுக்கும் டினோசர் என்பவர்கள் 16-ஆம் எண்ணுக்கும் செல்லுங்கள்.

**11.** இல்லை. ஆங்கிலம் என்பது தான் சரியான விடை. 4-ஆம் எண்ணில் உள்ள கேள்வி உங்களுக்காகவே காத்துக்கொண்டு இருக்கிறது.

**15.** நாகலாந்தின் அதிகாரபூர்வமான மொழி எது? நாகாமிஸ் என்பவர்கள் 6-ஆம் எண்ணுக்கும், ஆங்கிலம் என்பவர்கள் 8-ஆம் எண்ணுக்கும் கொங்கணி என்பவர்கள் 11-ஆம் எண்ணுக்கும் செல்லுங்கள்.

**3.** சாலையின் இடதுபுறம் வாகனங்கள் செல்ல வேண்டும் என்ற விதி, ஐரோப்பிய நாடுகளில் இல்லை என்பவர்கள் 5-ஆம் எண்ணுக்கும், ஒரு நாட்டில் இருக்கிறது என்பவர்கள் 7-ஆம் எண்ணுக்கும், எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் என்பவர்கள் 9-ஆம் எண்ணுக்கும் செல்லுங்கள்.

**12.** இல்லை. 14-ஆம் எண்ணில் உள்ள தகவலை அறிந்து கொள்ளுங்கள்.



**17.** இல்லை தவறு!! 14-ஆம் எண்ணுக்கு செல்லுங்கள்



**7.** ஆம். ஐரோப்பிய நாடுகளில் பிரிட்டனில் மட்டும்தான் போக்குவரத்து இடப்புறமாகச் செல்ல வேண்டும். அடுத்த கேள்வி 13-ஆம் எண்ணில் உள்ளது.

**16.** கேள்வியில் 'தற்போதுள்ள' என்ற வார்த்தை இருப்பதை மறந்துவிட்டீர்களா? 14-ஆம் எண்ணிலுள்ள தகவலை அறிந்துகொள்ளுங்கள்

**9.** இல்லை. 7-ஆம் எண்ணில் உள்ள தகவலை அறிந்து கொள்ளுங்கள்.



1. பான்ஜியா கண்டத்திலிருந்து பிரிந்த இரண்டு நிலப்பரப்புகளில் ஒன்று கோண்ட்வானாலாண்ட் மற்றது என்ன?
அ) லாரேஷியா ஆ) ஆசியா இ) யுரேஷியா ஈ)டான் கின்

2. பசுமை இல்ல விளைவு என்பது என்ன?
அ) பூமியின் மேற்பரப்பு குளிர்ச்சி அடைதல் ஆ) புற ஊதா கதிர்கள் தங்க வைக்கப்படுவதால் ஏற்படும் வெப்பம்
இ) கோள்கள் திசை மாறுதல் ஈ) உலகம் பசுமையாக மாறுதல்.

3. யாத்ரிப் நகரத்தை நாம் இப்போது எப்படி அறிவோம்?
அ) மெக்கா ஆ) மெதினா இ) ஜெருசலேம் ஈ) பாக்தாத்

4. புளூட்டோவின் பொருள் தற்போது என்னவென்று அழைக்கப்படுகிறது?
அ) குள்ளக் கோள் ஆ) துணைக்கோள் இ) எரி நட்சத்திரம் ஈ) வால்நட்சத்திரம்

5. பிற்கால இந்திய இசைமுறைக்கு ஆதாரமாக அமைந்தது எது?
அ) சாம வேதம் ஆ) சிலப்பதிகாரம் இ) ரகுவம்சம் ஈ) பரதசாஸ்திரம்

6. நாதஸ்வரத்துக்கு இணையாகக் கருதப்படும் பாரசீக இசைக்கருவி எது?
அ) சுர்னா ஆ) சிடார் இ) பாங்கோ ஈ) வயலின்

7. மிராஜ் என்பது என்ன?
அ) வாமன அவதாரத்தின் மறுபெயர் ஆ) நபிகள் நாயகம் சொர்க்கம் ஏறியது
இ) யேசுவின் உயிர்த்தெழுதல் ஈ) குருநானக் முக்தி அடைந்தது

8. புறா பந்தயங்களின் தாயகம் எது?
அ) பெல்ஜியம் ஆ) மியான்மர் இ) இங்கிலாந்து ஈ) இந்தியா

9. ஒன்று மட்டும் நாளமில்லாச் சுரப்பி அல்ல. எது?
அ) கல்லீரல் ஆ) தைமஸ் இ) தைராய்டு ஈ) பிட்யூட்டரி

10. தொடக்ககால தொலைபேசி பாகங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?
அ) ஜிப்டர்பாக்ஸ் ஆ) சாப்டர் பாக்ஸ் இ) பட்டர்ஸ்டாம்ப்ஸ் ஈ) மட்டர் பாக்ஸ்

11. சிவப்பு வண்ணமும் பச்சை வண்ணமும் சேர்ந்தால் என்ன வண்ணம் கிடைக்கும்?
அ) பழுப்பு ஆ) கருஞ்சிவப்பு இ) மஞ்சள் ஈ) கறுப்பு

12. இந்தியாவின் பொம்பே என்றழைக்கப்பட்ட நகரம் எது?
அ) ஹம்பி ஆ) சிதம்பரம் இ) மங்களூர் ஈ) பாட்னா

13. பிலாசட நடனம் என்பது?
அ) விளக்குகளைச் சுற்றி ஆடப்படுகிறது ஆ) மலர்களைச் சுற்றி ஆடப்படுகிறது.
இ) ரதத்தைச் சுற்றி ஆடப்படுகிறது ஈ) பாம்புச் சிலைகளைச் சுற்றி ஆடப்படுகிறது

14. டயமிர் என்றும் அழைக்கப்படுகிற சிகரம் எது?
அ) எவரெஸ்ட் ஆ) நந்தா தேவி இ) கஞ்சன்ஜங்கா ஈ) நங்கா பர்த்

15. ராமகிருஷ்ண பரமஹம்சரின் வரலாற்றை முதன்முதலில் எழுதியவர் யார்?
அ) ரோமைன் ரோலண்ட் ஆ) மாக்ஸ்முல்லர் இ) விவேகானந்தர் ஈ) சாரதா தேவி

16. ராவணனுடைய தாயின் பெயர் என்ன?
அ) கைகசி ஆ) ராஜவதி இ) மண்டோதரி ஈ) சாருமதி

17. அப்புமும்மை- யாரோடு இதைத் தொடர்புபடுத்துவீர்கள்?
அ) சத்யஜித் ரே ஆ) R.K.நாராயண் இ) ராஜா ராவ் ஈ) கிரீஷ் கர்னாட்

18. கிரிக்கெட் டெஸ்ட் மாட்சுகளில் ஒரு நாளின் ஆட்ட நேரம் எவ்வளவு?
அ) ஆறு மணி நேரம் ஆ) குறிப்பிட்ட நேர விதி இல்லை இ) எட்டு மணி நேரம் ஈ) ஏழு மணி நேரம்

19. தமிழ்நாட்டில் தனிநபர் சத்யாகிரகத்தைத் தொடங்கியவர் யார்?
அ) டி.எஸ்.எஸ்.ராஜன் ஆ) வ.உ.சிதம்பரம் இ) பூலித் தேவன் ஈ) பம்மல் சத்தம்

20. ஓர் இயக்கம் என்பது தவிர, நக்ஸல்பாரி என்பது என்ன?
அ) கிராமம் ஆ) சிறைச்சாலை இ) ஆயுதப்போர் ஈ) ஒன்றாக கோஷமிடுதல்

**விடைகள் :**

**1. அ, 2. ஆ, 3. ஆ, 4. அ, 5. அ, 6. அ, 7. ஆ, 8. அ, 9. அ, 10. இ,**

**11. இ, 12. அ, 13. அ, 14. ஈ, 15. ஆ, 16. அ, 17. அ, 18. அ, 19. அ, 20. அ,**

R.முத்துலிங்கம் X, S.நாகலிங்கராஜா IX, G.கௌசிக்செல்வி X, S.முருகசெல்வி X

# சமச்சீர் கல்வி

தமிழகத்திற்கும் சமச்சீர் கல்வி அறிமுகமாக இருக்கிறது. இதோ உங்கள் வாசிப்பிற்காக இந்தக் கல்வி முறை குறித்த தகவல்கள் :

செப். 2006இல் முனைவர் முத்துக்குமரன் தலைமையில் உருவான சமச்சீர் கல்விக் குழு தமிழகம் முழுவதும் ஆய்வு நடத்தி அறிக்கை வழங்கியது. தமிழக பள்ளிக் கல்வித்துறையின் கீழ் 56 ஆயிரம் பள்ளிகளும், 1 கோடியே 30 லட்சம் மாணவ, மாணவிகளும், 4 லட்சம் ஆசிரியர்களும் பணியாற்றி வருகின்றனர். தற்போது ஓரியண்டல் கல்வி, மாநிலக்கல்வி, ஆங்கிலோ இந்தியக் கல்வி, மெட்ரிக்குலேசன் கல்வி என 4 வகைகளில் கல்வி போதிப்பு உள்ளது. மேலும் மத்திய அரசின் கீழ் மூன்று வகை பள்ளிகளும் இங்கு இயங்குகின்றன. தற்போது மாநில அரசின் கீழ் இயங்கும் இந்த நான்கு வாரியங்கள் நீக்கப்பட்டு சமச்சீர் கல்வி மூலம் தமிழ்நாடு மாநில பள்ளி கல்வி வாரியம் என மக்களைக்கொண்ட தகுதியில் ஒரே அமைப்பாக இயங்க இருக்கிறது. மாணவர்கள் திறனை மேம்படுத்த தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும், கூர்மையான கருத்தான பாடத்திட்டம் வகுக்கப்பட உள்ளது.

**பாடத்திட்டம்** 1. தமிழ், 2. ஆங்கிலம், 3. பிற மொழி அல்லது தாய்மொழி, 4. கணிதம் (கணிப்பொறிப் பயிற்சி) 5. அறிவியல் (இயற்கை அறிவியல், சுற்றுச்சூழல், கல்வி, சுகாதாரம்) 6. சமூக அறிவியல் (வரலாறு, புவியியல், அரசியல், பொருளாதாரம்) 7. விளையாட்டு உடற் பயிற்சியும், 8. கலைகள், 9. கைத்தொழில் அல்லது தொழில் நுட்பம் சார்ந்த உடல் உழைப்பு பயிற்சி 10. என்.எஸ்.எஸ்., தேசிய மாணவர் படை, சாரணர் இயக்கம் (மூன்றும் ஒன்றின் உறுப்பினர்)

**பாடநூல்கள்** ஒரு பாடத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட பாடநூல்கள் வெளியிடப்படும். பள்ளிகள் தங்களது சுற்றுச்சூழலுக்கு ஏற்ப தேவையான தரத்தில் பாடநூல் தேர்வு செய்து கொள்ளலாம். பத்தாம் வகுப்பு பாடநூல்கள் ஒரே மாதிரி இருக்கும்.

**நூலகம்** நூலக வசதிகளும், அறிவியல், கணிதவியல், கணினி, மொழியியல் ஆகிய ஆய்வகம், கட்டாயம் இருக்க வேண்டும்.

**தேர்வு** மனனமுறை எதிர்நோக்கும் எழுத்து தேர்வு கூடாது. தொடக்க கல்வியில் வாய்மொழி தேர்வும், பின்பு படிப்படியாக எழுத்து தேர்வு நடைபெறும். மாணவர்களின் வாசித்தல் திறனை ஆசிரியர்கள் தினசரி சோதிக்க வேண்டும். நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு செயல் திட்டம், தொகுப்புகள் (ஆல்பம்) ஆகியவை தேர்வு பகுதியாகும். 10ம் வகுப்பு பொதுத்தேர்வு மொழிகள் 3 பாடத்திற்கு 300 மதிப்பெண்கள். கணிதம் 100, அறிவியல்100, சமூக அறிவியல் 100 மொத்த மதிப்பெண் 600 ஆகும்.

அப்படியென்றால் ஏழை, பணக்காரர், கிராமம், நகரம் என எல்லோருக்கும் சமமான கல்விகிடைக்கும்தானே?

C.அருண்குமார் B.Sc.,

## பேத்தியுடன் தேர்வு எழுதிய பாட்டி 70 வயதில் பிளஸ் 2 முடித்து சாதனை

இளம் வயதில் கைவிடப்பட்ட பள்ளிப் படிப்பை, தனது பேத்தியுடன் சேர்ந்து படித்து தேர்ச்சி பெற்றுள்ளார், 70 வயது பாட்டி. பாட்டியைவிட பேத்தி எடுத்த மதிப்பெண்கள், 4 சதவீதம் மட்டுமே அதிகம்.

பஞ்சாப் மாநிலம் லூதியானா மாவட்டத்தில் உள்ள ஜகராவில் வசிப்பவர் மன்ஜீத் கவுர். அப்பகுதியின் பிரபல நாட்டுப்புற பாடகர் குர்பக்ஷ் சந்தோவாலின் தாய். இளம் வயதில் கல்வியில் ஆர்வம் இருந்தாலும், எட்டாம் வகுப்பு வரை மட்டுமே மன்ஜீத் கவுரால் படிக்க முடிந்தது.

அதன் பின்னர் இளம் வயதிலேயே திருமணம் செய்து கொண்டு, குடும்பத்தை கவனித்து வந்தார். படிக்கும் வாய்ப்பு கைவிடப்போனது. தனது மகன்களுக்கு திருமணம் செய்து வைத்தார். மருமகள்களும் பள்ளிப் படிப்பு முடிக்காதவர்கள் தான். அவர்களை தொடர்ந்து படிக்கும்படி ஆலோசனை கூறினார். ஆனால், மருமகள்கள் அதை பின்பற்றவில்லை.

அவர்களுக்கு முன் மாதிரியாக, தானே பள்ளிப்படிப்பை முடிக்க முடிவு செய்தார் மன்ஜீத் கவுர். ஜகராவில் உள்ள தேசிய திறந்தவெளி பள்ளியில் மேல்நிலை இரண்டாண்டு பாடப்பிரிவில் சேர்ந்தார். இவரது பேத்தி மன்பிரீத் மேல்நிலைப்பள்ளியில் இரண்டாண்டு படித்து வந்தார்.

இருவரும் சேர்ந்து, பாடங்களை படித்து வந்தனர். ஒருவருக்கு ஒருவர் சந்தேகங்களை தீர்த்து பரஸ்பரம் விளக்கம் பெற்று படித்தனர். இருவரும் ஒரே நேரத்தில் தேர்வு எழுதினர். 50 சதவீத மதிப்பெண்களுடன் மன்ஜீத் கவுர் தேர்ச்சி பெற்றார். அவரது பேத்தியும் இரண்டாண்டு தேர்வில் தேர்ச்சி பெற்றார். அவர் பெற்ற மதிப்பெண்கள் 54 சதவீதம். பாட்டியை விட 4 சதவீதம் மதிப்பெண்கள் மட்டுமே பேத்தியால் அதிகம் பெற முடிந்தது.

தனது 70 வயதில், இளம் பருவத்து கனவை நிறைவேற்றியுள்ள மன்ஜீத் கவுர், இதைப்போல முன்னுதாரணமாகக் கொண்டு, தனது மருமகள்களையும் பள்ளிப்படிப்பை முடித்து, மேல்படிப்புக்கும் ஊக்குவிக்கும் அறிவுரை கூறியுள்ளார்.

A.S.கார்த்திக்ராஜா

## தல

காஷ்மீரை இந்தியாவின் 'தலை' என்று வர்ணிப்பார்கள். இந்திய வரைபடத்தில் காஷ்மீரை மறைத்துக் கொண்டு பார்த்தால் சரியாக இருக்காது. எல்லோரையும் கட்டிப்போடும் காஷ்மீரின் அழகைப் பார்த்தால் அதை ஒரு குட்டி சொர்க்கம் என்றே சொல்லலாம். காஷ்மீர் பற்றிய தகவல்கள்...



* காஷ்மீருக்கு இரு தலைநகரங்கள்.
* காஷ்மீர் வாழ் மக்களுக்கு இரு குடியுரிமைகள்.
* வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் காஷ்மீரில் நிலம் வாங்க முடியாது.
* காஷ்மீருப் பெண்கள் வெளிமாநிலத்தவரை மணந்தால் உரிமையாக தங்கள் குடியுரிமையை இழந்து விடுவார்கள்.
* தனக்கென்று சொந்தமாகக் கொடி வைத்துள்ள இந்திய மாநிலம் இது ஒன்று தான்.
* காஷ்மீர் மக்களுக்கு சொத்துவரி, நிலவரி இல்லை.
* காஷ்மீரில் மட்டுமே அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலை ஒரே நிலையில் (சுமார் 50 வருடமாக) மாறாமலிருக்கிறது.

A.மணி IX

# பாராட்டுகின்றோம்

மதுரை மாநகராட்சி பள்ளிகளில் பத்தாம் வகுப்பு
படித்து சிறப்பிடம் பெற்றவர்கள்

| பெயர் | பெற்ற மதிப்பெண்கள் | பள்ளியின் பெயர் |
|---|---|---|
| S.ஜஸ்மிதா பானு | 484 | ஈ.வெ.ரா. |
| C.ரேவதி | 481 | பழங்காநத்தம் ஜெயகோபால் கரோடியா, |
| ஐஸ்வர்யா | 470 | வெள்ளி வீதியார் |

கரும்பாலைப் பகுதியில் பத்தாம் வகுப்பில் சிறப்பிடம் பெற்றவர்கள்

| பெயர் | மதிப்பெண்கள் | பள்ளி | பெற்றோர் | முகவரி |
|---|---|---|---|---|
| N.அனீஸ் பாத்திமா | 470 | ஓ.சி.பி.எம் | A.நாகூர் கனி - N.சரிபா பீவி | 411, கிழக்குத் தெரு |
| C.சரண்யா | 453 | ஓ.சி.பி.எம். | R.சந்திரன் - C.தமிழ்செல்வி | 412, கிழக்குத்தெரு |
| S.பாலமுருகன் | 452 | டி.எஸ்.யு.எம். | சுப்பிரமணி - அம்சவள்ளி | PT காலனி |
| S.வினோத் | 449 | டி.எஸ்.யு.எம். | V.செல்வராஜ் - S.லட்சுமி | 176, நடுத்தெரு |
| M.சாமுண்டீஸ்வரி | 439 | ஓ.சி.பி.எம்., | M.மாரிமுத்து - M.கலைச்செல்வி | 301, கிழக்குத் தெரு |



N.அனீஸ் பாத்திமா



C.சரண்யா



S.வினோத்



M.சாமுண்டீஸ்வரி

# பாராட்டுகின்றோம்

மதுரை மாநகராட்சி பள்ளிகளில் 12ஆம் வகுப்பு
படித்து சிறப்பிடம் பெற்றவர்கள்

| பெயர் | பெற்ற மதிப்பெண்கள் | பள்ளியின் பெயர் |
|---|---|---|
| சி. வைஷ்ணவி | 1142 | அவ்வை |
| G.வாசுகி | 1086 | ஈ.வெ.ரா. |
| K.ஹமீதா பானு | 1085 | ஈ.வெ.ரா. |

கரும்பாலைப் பகுதியில் 12ஆம் வகுப்பில் சிறப்பிடம் பெற்றவர்கள்

| பெயர் | மதிப்பெண்கள் | பள்ளி | பெற்றோர் | முகவரி |
|---|---|---|---|---|
| T.தங்கராஜ் | 1026 | இளங்கோ மே.நி.பள்ளி | G.தெய்வேந்திரன் - T.ராணி | மேலத்தெரு |
| M.மருதுபாண்டி | 1002 | தியாகராசர் மே.நி.பள்ளி | N.மனி - பாண்டியம்மாள் | PT காலனி |

கரும்பாலை மதிப்பெண் பட்டியல் சிறு திரட்டிய தகவல் தொகுப்பின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ளது.
இது முழுமையானதல்ல.



T.தங்கராஜ்



M.மருதுபாண்டி

# SEED NOTES

Dear friends,

I reveal my thanks & wishes for working with me for the past 9 years to progress the life of SEED children and youth.

During 1999-2007 years, SEED produced 1 BL graduate, just about 54 arts & science students and 16 people in diploma and technical Trade. It adds proud to SEED. Among them 14 UG, 8 PG students are studying their studies out of SEED. One registered his PhD. I am happy to hear that many of them are working in various places.
In karumbalai, of the effort of SEED and inspiration 4 police constables, 2 village administrative officers works in government and many are preparing for government jobs according to information. SEED youth, volunteers encouraged to build a new way to SEED while 2006-07.then it performs better with government approval under legal registration. SEED senior volunteers recorded a very important role in growth of SEED.

**SEED Reports 2007-08 (9` year)**

**SEED students' achievements in schools and colleges**

P.Saravankumar (XI) won 1`` prize for best result in 10` STD at his school level.

SEED children are aiming to learn at least one folklore dance, it resulted that children won lot of prizes in school level dance competition.

